# சிவபுராணம்-ஞான விளக்கம்






உரையாசிரியர்

**பா.கமலக்கண்ணன்**

தொ.பே: 0413-2248046

அலைபேசி: 9952418046

# சிவபுராணம்-ஞான விளக்கம்

மாணிக்கவாசகர் அருளிய "சிவபுராணத்தில்" கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்:-

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து - வரி 93-95

பாட்டின் பொருளுணர்ந்து சொல்லவேண்டும் என்று கூற வேண்டிய காரணம் என்ன?

இதில், மெய்ஞ்ஞான இரகசியங்கள் அமைந்துள்ளன; ஆகவே ஞானகுருவிடமிருந்து உட்பொருளை உணர்ந்து கூறினால் சிறந்த பலன் கிடைக்கும் என்று அறிவித்துள்ளார்.

மெய்ஞ்ஞான குருவிடமிருந்து எளியேன் அறிந்த இரகசியங்களை உலகறியக் கூறுகின்றேன்; கேளுங்கள்:-

சிவபுராணத்தின் முதல்வரி "நமசிவய வாழ்க; நாதன்தாள் வாழ்க" என்று அமைந்துள்ளது. இந்த வரியின் முதல் பாதியாகிய, "நமசிவய வாழ்க" என்பதை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். இது எட்டெழுத்தால் அமைந்த இரண்டு சொற்களாகும். இதைப் பற்றி திருமூலர் கூறும் விளக்கத்தை அறிவோம்:-

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தால்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடம் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்து நின்றானே.

- திருமந்திரம் 996.

<u>திருமந்திரத்தின் முதல் வரி:-</u>

பொருள்:- "ந" என்ற எழுத்தால் மண், "ம" என்ற எழுத்தால் நீர், "சி" என்ற எழுத்தால் நெருப்பு, "வ" என்ற எழுத்தால் காற்று, "ய" என்ற எழுத்தால் ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களை இறைவன் படைத்தான்.

ஆதாரம்:- இந்த விளக்கத்திற்கு ஆதாரமான அகத்திய முனிவரின் பாடல்:-

போற்றிநின்ற சின்மயத்தைப் புகலக் கேளு
புகழ்பெரிய **பிருத்விமண் நவ்வெழுத்தாம்**
மாற்றியதோர் **அப்பு எழுத்து நீர்தான் மவ்வாம்**
மைந்தனே **சிவ்வெழுத்து தேயுதீயாம்**
கோற்றி நின்ற **வவ்வெழுத்து வாயு கறுப்பாம்**
கொண்டல்வெளி **யவ்வெழுத்தே பஞ்ச உருவாகி**
சாற்றறியாத தூலஉடல் தன்னிலாகி
தன்உச்சி வழி கடந்து ஓடும்பாரே.

- அகத்தியர் பஞ்சாட்சரம் 37ல் 34.

விளக்கம்:-

ந = மண்
ம = நீர்
சி = தீ
வ = காற்று
ய = ஆகாயம்.

ஆகாய வெளியிலுள்ள "ய" என்ற இறைவனே அண்டத்தில் பஞ்ச பூதங்களாகவும், மனித உடலில் பஞ்சபூதங்களாகவும் விளங்கி, மனிதனின் சிரசிலுள்ள உச்சிக்குழியைக் கடந்து உள்ளே சென்றுள்ளான். இப்பொருள் பற்றி அடுத்த வரிக்கான விளக்கத்தில் விரிவாக அறிவோம்.

திருமந்திரத்தின் 2வது வரி:-

பொருள்:- பற்பல ஜீவராசிகளின் தோற்றத்திற்காக "ந" என்ற எழுத்தால் எலும்பு, நரம்பு, தசையாலான உடலையும் (மண்), "ம" என்ற எழுத்தால் நீர், இரத்தம் ஆகியவற்றையும் (நீர்), "சி" என்ற எழுத்தால் உடலின் சூட்டையும்(தீ), "வ" என்ற எழுத்தால் சுவாசத்தையும்(காற்று), "ய" என்ற எழுத்தால் அறிவு, மனம்(ஆகாயம்) ஆகியவற்றையும் இறைவன் படைத்தான்.

ஆதாரம்:- மனித உடலில் எந்தெந்த இடங்களில் எந்தெந்த எழுத்துக்கள் அமைந்துள்ளன என்பதை அகத்தியர் வாக்கால் அறிவோம்.

பொருந்திநின்ற **அடிவயிற்றில் நகாரம் நிற்கும்**
புகழான **உந்தியின்மேல் மகாரம் நிற்கும்**
வருந்திநின்ற **நெஞ்சதிலே சிகாரம் நிற்கும்**
வண்மையுள்ள **கண்டத்தில் வகாரம் நிற்கும்**
திருந்திநின்ற **சிரசதனில் யகாரம் நிற்கும்**
- அகத்தியர் சுத்தஞானம் 100ல் 51.

குறிப்பு:-
ந - மண் = அடிவயிறு (தொப்புளுக்குக்கீழே)
ம - நீர் = தொப்புளுக்கு மேலே
சி - தீ = நெஞ்சம்
வ - காற்று= தொண்டை
ய - ஆகாயம்= புருவங்களின் நடுவில்.

திருமந்திரத்தின் 3ஆவது வரி:-

பொருள்:- பிரபஞ்சத்தை நிர்வகிப்பதற்காக "ந" என்ற எழுத்தால் பிரமன் (ஆக்கல்), "ம" என்ற எழுத்தால் திருமால் (காத்தல்), "சி" என்ற எழுத்தால் ருத்திரன் (அழித்தல்), "வ" என்ற எழுத்தால் மகேஸ்வரன் (மறைத்தல்), "ய" என்ற எழுத்தால் சதாசிவம் (அருளல்) ஆகிய ஐந்தொழில் தெய்வங்களைப் படைத்தான்.

ஆதாரம்:-

1. **நவ்வெழுத்தே பிரமனாராகும்** - அதில்
**நாரணன் மவ்வெழுத்தானானே**
**சிவ்வெழுத்தே தெய்வ ருத்திரனாம்** - இன்னும்
செப்புவன் கேளடி ஞானப்பெண்ணே.

2. செப்பவே **வவ்வு மகேஸ்வரனாம்** - வட்டம்
சேர்ந்து **யகாரம் சதாசிவனாம்**
தப்பிலா ஐந்தெழுத்தாலே - சராசரம்
தங்கியிருந்தது ஞானப் பெண்ணே.
- மதுரை வாலைசுவாமி ஞானக்கும்மி, 68-69.

விளக்கம்:-

ந = பிரமன் - ஆக்கல்
ம = திருமால் - காத்தல்
சி = ருத்திரன் - அழித்தல்
வ = மகேஸ்வரன் - மறைத்தல்
ய = சதாசிவம் - அருளல்

இந்த ஐவரின் இயக்கத்தால் சராசரம் தங்கியிருக்கின்றது.

<u>திருமந்திரத்தின் 4ஆவது வரி:-</u>

பொருள்:- எல்லா ஜீவராசிகளிலும் உயர்வாக படைக்கப்பெற்ற மனித உடலிலுள்ள **ஐந்து ஆதாரங்களிலும் ஐந்தொழில் தெய்வங்களை நிலைபெறச் செய்து** அவர்களுக்கு மேலே உச்சிக்குழி முதல் உண்ணாக்குவரை நீண்டுள்ள பிரமரந்திரம் என்னும் நுண்ணிய துவாரத்தினுள்ளே நெற்றி நடுநிலையில் துரியம் என்ற நிலையில் தூல உடலுக்குரிய சூக்கும தேகத்தை வைத்து, அதற்கு மேலே துரியாதீதம் என்ற நிலையில் அறஆழியின் நடுவே ஜோதியாய் (சிவலிங்கத்தின் நடுவில் கூம்பு வடிவ ஜோதியாய்) மனிதனின் ஜீவசொரூபமாக

பரப்பிரமம் அமர்ந்து, இரு நாசித்துவாரங்களின் வழியாக சுவாசத்தை இழுத்தும் விடுத்தும் ஓய்வின்றி செயல்பட்டு உடலை இயங்கச் செய்கின்றது.

விளக்கம்:-

மனித உடலிலுள்ள ஆதார நிலைகளில் அமைந்துள்ள தெய்வங்களின் விளக்கம்:-

1. சுவாதிஷ்டானம்=தொப்புளுக்குக் கீழே = ந = மண் = பிரமன்
2. மணிபூரகம் = தொப்புளுக்கு மேலே = ம = நீர் = திருமால்
3. அநாதகம் = நெஞ்சம் = சி = தீ = ருத்திரன்
4. விசுத்தி = தொண்டை = வ = காற்று = மகேஸ்வரன்
5. ஆக்ஞேயம் = இருபுருவங்களின் நடு = ய = ஆகாயம் = சதாசிவம்.

இதுவரை திருமூலரின் சாட்சியத்திலிருந்து நாம் அறிந்த உண்மைகளாவன:-

1. அண்டத்தில் ஒளிர்கின்ற அரூபமான பரப்பிரமம், நமசிவய என்ற ஐந்தெழுத்துக்களால், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களைப் படைத்தது.

2. பஞ்ச பூதங்களைக் கொண்டே சகல ஜீவராசிகளையும் படைத்தது.

3. பஞ்ச பூதங்களையும் முறையோடு இயக்குவதற்காக பிரமன், திருமால், ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் ஆகிய ஐந்தொழில் தெய்வங்களைப் படைத்தது.

4. எல்லா ஜீவராசிகளிலும் உயர்வான மனித உடலில் ஐந்தொழில் தெய்வங்களை நிலைநிறுத்தி, அவனுடைய சிரசில் உச்சிக்குழி முதல் உண்ணாக்கு வரை நீண்டுள்ள பிரமரந்திரம் என்னும் நுண்ணிய துவாரத்தினுள்ளே, நெற்றி நடுநிலையில் மனிதனின் சூக்கும சரீரத்தை துரியம் என்ற நிலையில் வைத்து, அதற்கு மேலே துரியாதீதம் என்ற நிலையில் ஜீவ

சொரூபமாய் (அறஆழியின் நடுவில் சுடராய்) அமர்ந்து இரு நாசித்துவாரங்களின் வழியாக சுவாசத்தை இழுத்தும் விடுத்தும் உடலை இயக்குகின்றது. (ஜீவ சொரூபத்தைப் பற்றிய விளக்கத்தை நாதன்தாள் வாழ்க என்ற தலைப்பில் காண்போம்)

மாணிக்க வாசகர் "நமசிவய வாழ்க" என்ற சொற்களால் விளக்கி உள்ள கருத்து யாது?

1. அண்டத்திலுள்ள பஞ்ச பூதங்களும் முறையோடு செயல்பட்டு உலகை சீராக இயங்கச் செய்யுமாக!

2. பிண்டத்திலுள்ள பஞ்ச பூதங்களும் இயல்பாக செயல்பட்டு மக்களை நோயின்றி வாழச் செய்யுமாக!

3. அண்டத்திலுள்ள ஐந்தொழில் தெய்வங்களான பிரமன், திருமால், ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் ஆகிய ஐவரோடு அரூபமான பரப்பிரமமும் வாழ்க!

4. பிண்டத்திலுள்ள ஐந்தொழில் தெய்வங்களும் ஜீவனாய் ஒளிரும் பரப்பிரமமும் வாழ்க!

இப்போது இந்த ஞானப் பொருளை உணர்ந்த நாம் அனைவரும் "நமசிவய வாழ்க" என்று கூறுவோம் வாரீர்!.

ஆனால், உலக வழக்கில் பிரமன், திருமால், ருத்திரன், என்ற மூவர் மட்டுமே ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்வதாகவும் இவர்களுள் அழித்தல் தொழில் புரியும் ருத்திரனே உயர்ந்தவர் என்றும் கூறப்படுவதற்கு மாறாக ஐந்தொழில் தெய்வங்கள் என்ற விளக்கம் குழப்பம் ஏற்படுத்துவதாக உள்ளதே என்று வினவலாம்.

இறைவனைப் பற்றிய உண்மைகளை அறிந்தவர்கள் ஞானிகள், முனிவர்கள், சித்தர்கள் முதலானோர் என்பதை நாம் அறிவில் நிறுத்த வேண்டும். திருமூலர் முதலான சித்தர்கள்

பலரும் ஐந்தொழில் தெய்வங்களைப் பற்றி பாடியுள்ளனர். மேலும், இவ்வுலகிற்கு பிரமன், திருமால், ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் ஆகியோர் ஐந்தொழில்கள் புரிவதைப் போன்று ஒவ்வொரு அண்டத்திற்கும் தனித்தனியாக ஐவர் உள்ளனர் என்று பின்வரும் பாடல் கூறுகின்றது:-

உருத்திரர்கள் ஒருகோடி நாரணர் பலகோடி
உறுபிரமர் பலகோடி இந்திரர் பலகோடி
பெருத்த மற்றைத் தேவர்களும் முனிவர்களும் பிறகு
பேசில் அனந்தம் கோடி ஆங்காங்கே கூடி
- திருஅருட்பா 6இ/42:63.

மேலும் அழித்தல் தொழில் புரியும் ருத்திரன் வேறு, ஐந்தொழில்களையும் தாமே தனித்துச் செய்ய வல்ல நடராஜப் பெருமான் வேறு என்று கீழ்க்கண்ட பாடல் கூறுகின்றது:-

அயனும் அரியும் **அரனும் மகிழ**
அருள்நடன விமலனே
- திருஅருட்பா 6ஈ/I-1:75

இப்பொருள்பற்றி நாதன்தாள் வாழ்க என்ற தலைப்பில் விரிவாகக் காண்போம். இப்போது பின்வரும் பாடலை ஆதாரமாகக் காட்டி என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்:-

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு
உற்றகலை மடந்தை
இன்னும் ஓதுகிறாள்.

அடுத்து, சிவபுராணத்தின் முதல் வரியிலுள்ள பிற்பகுதியான "நாதன்தாள் வாழ்க" என்ற சொற்றொடரைக் காண்போம்.

நாதன்தாள் வாழ்க!

"நாதன் தாள்" என்பது இறைவனைப் பற்றிய ஒரு பரிபாஷை வாக்கியமாகும். இந்த பரிபாஷை வாக்கியத்தின் விளக்கத்தை வெளிப்படுத்தும் கீழ்க்கண்ட பாடலைக் காண்போம்:-

உருவராகியும் அருவின ராகியும்
　　உருஅரு வினராயும்
ஒருவரேஉளார் கடவுள் கண்டறிமினோ
　　உலகுளீர்; உணர்வின்றி
இருவராம் என்றும் மூவரேயாம் என்றும்
　　இயலும் ஐவர்கள் என்றும்
எருவராய் உரைத்து உழல்வதென் உடற்குயிர்
　　இரண்டு மூன்றெனலாமே.
- திருஅருட்பா 6அ/24:45

பொருள்:-

உலகமக்களே! கேளுங்கள்! கடவுள் உருவமுடைய ஒருவராகவும் (நடராஜர்), அரூபமானவராயும் (ஜோதி சொரூபமான பரப்பிரமம்), உருஅருவினராயும் (அறஆழியின் நடுவில் ஜோதி சொரூபம்) மூன்று தோற்றங்களில் விளங்கும் ஒருவரேயாவார். இந்த உண்மையை அறியாது, இருவர் என்றும் மூவர் என்றும் ஐவர் என்றும் பலவாறாக உரைத்து உழல்வது, ஒரு உடலுக்கு உயிர் இரண்டென்றும் மூன்றென்றும் கூறுவதைப் போலாகும்.

இப்பாடலிலிருந்து, ஏக இறைவனுக்குக் கீழ்க்கண்டவாறு மூன்று தோற்றங்கள் உள்ளன என்ற புதிய செய்தியை அறிகிறோம் :-

1. அரூபமான ஜோதிசொரூபமான பரப்பிரமம்.
2. அரூபாரூபமான அறஆழியின் நடுவில் ஜோதி விளங்கும் ஜீவனின் சொரூபம்.
3. உருவமுடைய நடராஜரின் சொரூபம்.

மேற்கண்ட மூன்று தோற்றங்களுள், இடையிலுள்ள அறஆழியின் நடுவில் ஜோதி விளங்கும் ஜீவனின் சொரூபத்தையே "நாதன்தாள்" என்ற வாக்கியம் குறிப்பிடுகின்றது. ஆகவே இதைப் பற்றி விரிவாக அறிவோம்.

முதலில் திருஞானசம்பந்தர் கூறுவதைக் கேட்போம்:-

உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய்
ஆங்காங்கே நின்றான்.
- தேவாரம், திருவீழி மிழலை.

பொருள்:-

இறைவன் எண்பத்து நான்கு இலட்சம் வகையான உயிரினங்களைப் படைத்து, அவற்றுள் உயிர்க்குயிராய் ஒவ்வொன்றின் உள்ளேயும் அமர்ந்துள்ளான்.

84 லட்சம் யோனிபேதத்தைப் பற்றிய விளக்கமாவது:-

ஊர்வன பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர்,பறவை, நாற்காலோர் பப்பத்தாம் - சீரிய
பந்தமாம் தேவர் பதினாலு அயன் படைத்த
அந்தமில் சீர்த்தாவரம் நாலைந்து - பழம்பாடல் திரட்டு.

| | | |
|---|---|---|
| 1. | தேவர்கள் | - 14 லட்சம் வகை |
| 2. | மானிடர் | - 9 லட்சம் வகை |
| 3. | நாற்கால் மிருகங்கள் | - 10 லட்சம் வகை |
| 4. | ஊர்வன | - 11 லட்சம் வகை |
| 5. | நீர்வாழ்வன | - 10 லட்சம் வகை |
| 6. | தாவரம் | - 20 லட்சம் வகை |
| 7. | பறப்பன | - 10 லட்சம் வகை |
| | மொத்தம் | - 84 லட்சம் வகைகள் |

திருஞானசம்பந்தரின் வாக்கை உறுதிப்படுத்தும் வேதவாக்கியத்தைக் காண்போம்:-

" ஒருவனேயாகிய தேவன் எல்லா ஜீவராசிகளிலும் மறைந்திருக்கிறான்.அவன் எங்கும் வியாபித்தவன். எல்லா உயிர்களுக்கும் அந்தராத்மா"

- யஜூர்வேதம், ச்வேதாச்வதர உபநிஷதம் 6:11

இரண்டாவதாக மனித உடலில் எந்த இடத்தில் இறைவன் கோயில் கொண்டுள்ளான் என்று திருமூலர் கூறுவதைக் கேட்போம் :-

பச்சிம திக்கிலே வைத்தே ஆசாரியன்
நிச்சலும் என்னை நினையென்ற அப்பொருள்
**உச்சிக்குக் கீழே உண்ணாக்கு மேலது**
வைச்ச பதமிது வாய்திற வாதே.

- திருமந்திரம் 1780.

திருமூலருடைய வாக்கிலிருந்து, உச்சிக்குழிக்குக் கீழே (குழந்தைப் பருவத்தில் நெற்றிக்கு மேலே சிரசில் பள்ளமாகக் காணப்பெறுவது) உண்ணாக்குக்கு மேலே இறைவன் தன் **பாதத்தை** அமைத்துள்ளான் என்று அறிகிறோம். இதைப் பற்றி வேதம் கூறுவதைக் கேட்போம்:-

1. "காண்பதற்கரியதும், அனைத்திலும் ஊடுருவி உள்ளுறையும் மறைபொருளும் **புத்திகுகையில்** நிலைபெற்றதும் உடல்தோறும் வியாபித்து நிற்பதும் பழைமையான பொருளுமாகிய அந்த திவ்ய தேஜோமயத்தை அத்தியாத்ம யோகத்தால் உணர்ந்த தீரனானவன், இன்பதுன்ப கிளர்ச்சி விட்டவனாகிறான்"

- யஜூர்வேதம், கடஉபநிஷதம் 2:12

2. "அந்த ஆதிபுருஷன் தலையின் உச்சியாகிய இந்த எல்லையைப் பிளந்து கொண்டு, இந்த வாயிலின் வழியாக உள்ளே நுழைந்தான். இந்த வாயிலுக்கு வித்ருதி (பிரமரந்திரம்) என்று பெயர்"

- ரிக்வேதம், ஐதரேய உபநிஷதம் 1/3:12

மனிதனின் ஜீவசொரூபம், உச்சிக்குக் கீழே உண்ணாக்குக்கு மேலே புத்திகுகை என்றும், பிரமரந்திரம் என்றும் கூறப்படும் நுண்ணிய துவாரத்தினுள்ளே அமைந்துள்ளது என்று அறிகிறோம்.

பிரமரந்திரத்தில் எந்த இடத்திற்கு நேராக அமைந்துள்ளது என்ற வினாவிற்குத் திருமூலர் விடையளிப்பதைக் கேட்போம்:-

**நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி**
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் **பரமனிருந்திடஞ்**
**சிற்றம்பல மென்று சேர்ந்து கொண்டேனே**

- திருமந்திரம் 2770.

நெற்றியில், இருபுருவங்களின் நடுவேயுள்ள சிற்றம்பலம் என்னும் இடத்தில் பரப்பிரமம் வீற்றிருக்கின்றான் என்று அறிகின்றோம். திருமூலரின் கூற்றை உறுதிப்படுத்தும் வேத வாக்கியங்களைக் காண்போம்:-

1. "எல்லாவற்றையும் எளிதாக அறிபவரும், எல்லாவற்றையும் விசேஷமாய் அறிபவரும் எவரோ, இப்புவியில் காணப்பெறும் மகிமை எல்லாம் எவருடையதோ **அந்த பரமாத்மா திவ்ய பிரமபுரமாகிய சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ளார்.**"

- அதர்வணவேதம், முண்டக உபநிஷதம் 2/2:7

2. "அதனுடைய ஸ்தானம் எது என்றால் புருவங்களும் நாசியும் கூடுமிடம் எதுவோ, அதுவேயாகும்"

- யஜூர்வேதம், ஜாபால உபநிஷதம் 1/3:12

சிற்றம்பலத்தில் எந்த அமைப்பில் இறைவன் அமர்ந்துள்ளான் என்ற வினாவிற்குத் திருவள்ளுவர் கூறும் விடையைக் கேட்போம்:-

**மலர்மிசை ஏகினான் மாணடி** சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் - திருக்குறள் 3.

திருவள்ளுவர் வாக்கை உறுதிப்படுத்தி, வேதம் கூறும் விளக்கத்தைக் கேட்போம்:-

" இந்த பிரமபுரத்தில் **தாமரைமலர் போன்ற சின்னஞ்சிறு மாளிகை உண்டு.அதனுள் சிற்றம்பலம்.** அதில் உள்ளது எதுவோ அதைத் தேட வேண்டும். ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்."

- சாமவேதம், சாந்தோக்ய உபநிஷதம் 8/1:1

"மலர்மிசை ஏகினான்" என்ற வள்ளுவர் வாக்கும், "தாமரைமலர் போன்ற சின்னஞ்சிறு மாளிகை" என்ற வேதவாக்கும் பொருந்திநிற்கக் காண்கிறோம் ! சிவலிங்கத்தின் அடிப்பாகம் தாமரை மலரேயாகும்.

நெற்றிநடுநிலையில் இரு புருவங்களும் கூடுமிடத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் இறைவன் அமர்ந்துள்ளான் என்ற வினாவிற்கு திருவள்ளுவர் கூறும் விடையாவது:-

கோளில் பொறியில் குணமிலவே **எண்குணத்தான்**
தாளை வணங்காத் தலை - திருக்குறள் 9.

"எண்குணத்தான்" என்றால் என்ன பொருள் என்ற வினாவிற்கு ஒரு முனிவர் கூறும் சான்றைக் கேட்போம்:-

உரைக்கிறேன் வெளிப்பாழும் ஒளியின்பாழும்
ஓகோகோ வெளியொளியாய் நின்ற பாழும்
நிரைக்கிறேன் இது கடந்தப்பால் நிர்க்குணத்தின் பாழும்
நேரான மனத்துக்கும் எட்டாதாகி
விரைக்கிறேன் அன்னமயம் பிராணமயமாகி
மேவிநின்ற மனோமயமாய் வெளியில் கூடி
திரைக்கிறேன் புவியடங்கலும் ஒன்றாய் நின்ற
திறமான விஞ்ஞான மயமுமாச்சே.

- சட்டைமுனி வாத காவியம் 1000ல் 1:3

பொருள்:- பிரமரந்திரத்தினுள்ளே நெற்றிநடுநிலையிலுள்ள 1.ஆக்ஞேயம் என்ற வெளிக்கு மேலே 2.ஒளிவெளி; 3.வெளியொளிவெளி; 4.நிர்க்குணவெளி; 5.அன்னமயகோசம்; 6.பிராணமயகோசம்; 7.மனோமயகோசம்; 8.விஞ்ஞானமயகோசம் ஆகியவற்றிற்கு மேலே அமர்ந்துள்ளான்.

இவ்வாறு எண்குணத்தானாய் விளங்குவதற்கு அடிப்படை என்ன என்ற வினாவிற்கு அந்த முனிவரே கூறும் விடையைக் கேளுங்கள்:-

நிர்க்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சனமுமாகி
நேரான பூரணமாய் மனமெட்டாத
சர்க்குணமாய் சமரசமாய்த் தானும் தாண்டி
**சச்சிதானந்த வெளிக்கப்பால் நின்ற**
தர்க்குணமாய் எனையாண்ட சின்மயத்தைப் போற்றி
சமரசமாய் வேதாந்த வாதம் சொல்வேன்.

- சட்டைமுனி வாத காவியம் 1:1

பாடுகின்றேன் பராபரமே அகண்டவித்து
பண்பாக அதற்கடுக்கப் பரையினுடை வெளிதான்;
நீடுகிறேன் அதற்கடுக்க ஆகாச வெளிதான்;
நேராக அதன்கீழே வாயு வாச்சு;
நாடுகிறேன் அதன்கீழே வன்னி வன்னி;
நலமாக அதன்கீழே சலமுமாச்சு;
ஊடுகிறேன் அதன்கீழே பூமியாச்சு;
ஓகோகோ சீவன் எல்லாம் உதித்தவாறே.
- சட்டைமுனி வாத காவியம் 1:2

பொருள்:- அண்டத்தில் 1.பூமி 2.சலவெளி; 3.வன்னிவெளி; 4.வாயுவெளி; 5.ஆகாசவெளி; 6.பரைவெளி; 7.பராபரவெளி; 8.சச்சிதானந்த வெளி ஆகிய எட்டு நிலைகளைக் கடந்து இறைவன் விளங்குவதால், அதே போன்று பிண்டத்திலும் எண்குணத்தானாய் விளங்குகின்றான் என்பது முனிவர் வாக்கு.

அந்த ஜீவசொரூபம் எந்த அமைப்பில் விளங்குகின்றது என்ற, வினாவிற்குத் திருவள்ளுவர் இவ்வாறு விடையளிக்கிறார்:-

அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறஆழி நீந்தல் அரிது - திருக்குறள் 8.

இறைவனுடைய தாளின் தோற்றம், தெய்வீக சக்கரம் போன்ற ஜோதி சொரூபம் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இதற்கு ஆதாரமான வேதவாக்கியத்தைக் காண்போம்:

"பிரமயோனியாகப் பொன்போல் ஒளிரும் ஈசன் என்ற பொருளைப் பார்க்கும் திறமையுடைய ஞானியானவன் புண்ணிய பாவங்களை உதறிவிட்டு, பரம்பொருளின் திருவடிகளை அடைகிறான்."
- அதர்வண வேதம், முண்டக உபநிஷதம் 3/1:3.

திருவள்ளுவர் அறஆழி என்று குறிப்பிட்டதை, வேதம் "பிரம்மயோனி" என்று குறிப்பிடக் காண்கிறோம்.

அந்த ஜீவசொரூபத்தின் பருமன் எவ்வளவாக இருக்கும் என்ற வினாவிற்குத் திருமூலர் கூறும் விடையைக் கேளுங்கள்:-

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
**ஆவியின் கூறது நூறாயிரத் தொன்றே**

- திருமந்திரம் 2011.

திருமூலரின் வாக்கைப் பின்வரும் வேதவாக்கியம் உறுதிப்படுத்தக் காணலாம்:-

"ஒரு மயிரிழையின் நுனியை நூறுபாகமாக்கி, அதில் ஒன்றை மறுபடி நூறுபாகமாக்கினால் எவ்வளவு சூட்சுமமாக இருக்குமோ, அப்படி சூட்சுமமானவன் அந்த ஜீவன் என்று அறிய வேண்டும். அப்படி அறிபவன் எல்லையற்றவனாவன்"

- யஜூர்வேதம், ச்வேதாச்வதர உபநிஷதம் 5:9.

இவ்வளவு சூட்சுமமான ஒன்றை எவ்வாறு காணமுடியும் என்ற வினாவிற்கு, இவ்வாறு விடை கிடைக்கின்றது:-

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

- திருஅருட்பா மகாமந்திரம்

பொருள்:- அண்டத்தில் விளங்கும் அருளே உருவான பரப்பிரமத்தின் ஜோதி சொரூபம், பிண்டத்திலும் ஒளிர்கின்றது. ஞானத்தவம் செய்தால் அவனுடைய தனிப்பெருங்கருணையினாலே ஞானியின் கண் முன்னால் அருட்பெருஞ்சோதியாய் (உள்ளங்கை அளவில்) காட்சி தரும்.

இதைக்கண்டவர்கள் யாராவது சான்றளித்துள்ளனரா?

1. **உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்**
- திருமந்திரம் 725.

2. தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
**தேடித்தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக்கண்டு கொண்டேன்** - அப்பர் தேவாரம் 4-9:12

3. தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
**கண்ணால் யானும் கண்டேன் காண்க**
- மாணிக்கவாசகர் திருஅண்டப்பகுதி 56-58

4. **ஊனில் உயிரில் உணர்வினில்**
**நின்ற ஒன்றை உணர்ந்தேனே**
- நம்மாழ்வார் 47.

5. **பிண்டத்தினுள்ளே பேராதி றைவனைக்**
**கண்டுநான் அர்ச்சிக்கு மாறு**
- அவ்வைக்குறள், அர்ச்சனை 7

மேற்கண்ட சாட்சியத்தை உறுதிப்படுத்தி பகவத்கீதை கூறுவதைக் கேட்போம்:-

"யாரோ ஒரு புருஷன்தான் இந்த ஆத்மாவை ஓர் ஆச்சர்ய வஸ்துவைக் காண்பது போல் காண்பான். ஒரு மகாபுருஷன்தான் இந்த தத்துவத்தை ஆச்சர்யமாக வர்ணிக்கிறான்"

- பகவத் கீதை 2:29.

தம்முடைய ஜீவ சொரூபத்தைக் கண்டவர்கள் அது எவ்வாறு தோற்றமளித்தது என்று கூறியிருக்கிறார்களா என்ற வினாவிற்குரிய விடையைக் கேளுங்கள்:-

1. **சிந்தையாய் நின்ற சிவனே போற்றி**
சீபர்ப்பதம் சிந்தை செய்தாய் போற்றி
**புந்தியாய்ப் புண்டரிகத்துள்ளாய்** போற்றி
- அப்பர், திருவதிகை 9.
(புண்டரிகம்=தாமரைமலர்)

2. **சோதியைச் சுடர் செம்பொன்னை அம்பலத்து**
ஆதியை அடியேன் மறந்து உய்வனோ?-அப்பர்,கோயில்

3. ஓதியாரும் அறிவாரில்லை ஓதி உலகெலாம்
**சோதியாய் நிறைந்தான் சுடர் சோதியுட் சோதியான்**
- சம்பந்தர், திருவையாறு.

4. **சோதியே சுடரே சூழொளி விளக்கே**
- மாணிக்கவாசகர் அருட்பத்து 458

5. மாசில்ஜோதி மணிவிளக்கே - திருஅருட்பா 2/14:8.

6. விடுவேனோ என் விளக்கை என் ஆவியை
- நம்மாழ்வார் 2152.

7. **நெய்விட்டிலாத இடிஞ்சிலுமாமே** - திருமந்திரம் 503
(இடிஞ்சில் = அகல்விளக்கு)

8. தெள்ளத் தெளிவார்க்கு **சீவன் சிவலிங்கம்**
- திருமந்திரம் 1823

9. **சீவன் என்ன சிவன் என்ன வேறில்லை**
- திருமந்திரம் 2017

10. **தம்மில் சிவலிங்கம் கண்டு** அதனைத்தாம் வணங்கி
- திருக்களிற்றுப்படியார் 44.

11. **சீவன் சிவலிங்கமாகத் தெளிந்தவர் தம்**
**பாவம் நசிக்கும் பரிந்து**
- அவ்வைக்குறள், அங்கியில் பஞ்சு 10.

12. சோதி சொரூபத்தைப் பார்த்து - அதில்
சொக்கியே நின்றிடத் தேகமும் வேர்த்து
**ஆதி மகாலிங்கம் கண்டு** - அதில்
ஐம்புலன் ஒடுங்கியே ஆனந்தம் கண்டு
- கல்லுளிச் சித்தர் 38.

13. திருவிருந்த **சோதியைநான் என்ன சொல்வேன்**
தீர்க்கமுடன் **சூரியன்போல் வட்டம் காணும்**
**குருவிருந்த வட்டமதில் உள்ளே பார்த்தால்**
குளிர்ந்த மதி பூரண சந்திரனுக்குள்ளே
**காணுமடா கற்பூரதீபம் தானே**
- அகத்தியர் பஞ்சாட்சரம் 6

14. நாசிமுனை மீதேறி நடக்கும் பாதம்
நடுவெளியாம் **கமலம்** உச்சி ஞானத்துள்ளே
மாசிலா வடிவு **சிவலிங்கமாகி**
**மாசற்ற பளிங்கொளியாய் வளர்ந்த சோதி**
- திருவள்ளுவர் நாதாந்த சாரம் 35.

15. உச்சிமகாமேரு முடித் **தீபமாகி**
உண்ணாக்கின்மேல் புருவ நடுவதாகி
- சுகப்பிரமரிஷி ஞானசூத்திரம் 1.

16. உச்சியதன் கீழே உண்ணாவதன் மேலே
மெச்சும் **சுடராய்** விளங்கவே வந்தவரோ!
- கடுவெளிச்சித்தர் பூரண ஞானம் 65.

17. பத்தியுடன் செய்து வந்தால் ஆத்தாளே
**பரம்பொருளும் தோன்றுமடி**
சித்தி அடைந்தவர்க்கு ஆத்தாளே
**தெரியுமே சோதியுந்தான்**
- அழுகண்ணீர்சித்தர் வாத கற்பம் 102.

மேற்கண்ட தெளிவான சான்றுகளிலிருந்து, ஜீவனின் சொரூபம் சிவலிங்க வடிவம் (நடுவில் கூம்பு வடிவஜோதி) என்றும், மெய்ஞ்ஞானத்தவத்தால், அதைக் காணலாம் என்றும் உறுதியாக அறிகிறோம். பரப்பிரமத்தின் அரூபாரூபமான சிவலிங்க வடிவையே சிவபெருமான், தேவர்கள், முனிவர்கள் ஆகிய அனைவரும் வணங்கித் தவம் செய்கின்றனர். இந்த உருவிற்கு தாள், திருவடி, பாதம் என்று பல பெயர்களை நம் ஆன்றோர் சூட்டினர். சூக்குமசரீரம் தவத்தால் உயர்ந்து தனக்கு மேலேயுள்ள ஜீவசொரூபமான திருவடியை அடைவதே முக்தியடைவதாகும். இதையே "இறைவன் திருவடி சேர்ந்தார்" என்ற சொல் குறிக்கும் என்பது குருவாக்காகும்.

மனிதன் நீண்டகாலம் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற கருத்தில்தான் மாணிக்கவாசகர் "நாதன்தாள் வாழ்க" என்று பாடினார். ஆகவே, ஒருமை மனத்தினராய் நாதன்தாள் இருக்குமிடத்தைக் கருத்தில் இருத்தி, இருகண்மூடி "நமசிவய வாழ்க, நாதன்தாள் வாழ்க" என்று பிரார்த்திப்போம். வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

இனி சிவபுராணத்தின் இரண்டாவது வரி முதல் 95ஆம் வரிவரை ஞானவிளக்கம் காண்போம்.

2. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

- கண் இமைக்கின்ற பொழுது கூட நீங்காமல் என் இதயத்தை இயக்குவிக்கின்ற இறைவன்தாள் வாழ்க!

3. கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
- விண்ணுலகம், பாதாளஉலகம் ஆகிய இரண்டையும் ஆட்சி செய்கின்ற ஜோதி சொரூபனின் தாள் வாழ்க!

4. ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
- வேதங்களாகி நின்று, அவற்றின் மூலம் மனிதனை அணுகி அருள் புரிவோன் தாள் வாழ்க!

5. ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
- உலகுக்கெல்லாம் ஏக பரப்பிரமமாகவும், அநேக தெய்வங்களாகவும் விளங்கும் இறைவனடி வாழ்க!

6. வேகம் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
- மரணத்தைப் போக்கி ஆட்கொள்ளும் இறைவனடி வெல்க!

7. பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
- பிறப்பை அறுக்கும் சிவபெருமானுடைய அருளடிகள் வெல்க!

8. புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
- தனக்கு அன்னியமாயிருப்போர்க்கு தூரத்தே இருப்போனுடைய மலரடிகள் வெல்க!

9. கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
- கரங்குவித்து வணங்குவோரைக் கண்டு, உள்ளம் மகிழும் இறைவனடி வெல்க!

10. சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
- சிரந்தாழ்த்தி வணங்குவோரை உயர்ந்திடச் செய்யும் சிறப்புடையோன் திருவடி வெல்க!

11. ஈசனடிபோற்றி எந்தை யடிபோற்றி
- சிவபெருமான் திருவடி போற்றி; எம் தந்தை திருவடி போற்றி!

12. தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
- ஜோதிசொரூபனடி போற்றி; சிவபெருமானின் செவ்விய திருவடி போற்றி!

13. நேயத்தே நின்ற நிமல னடி போற்றி
- அன்பிலே நிற்கும் மாசிலாதானடி போற்றி!

14. மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
- மாயை சூழ்ந்த பிறப்பை அறுக்கும் இறைவனடி போற்றி!

15. சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
- சிறப்புடைய வீடுபேற்றிற்குரிய நம் இறைவனடி போற்றி!

16. ஆராத இன்பம் அருளுமலை போற்றி
- தெவிட்டாத அமிர்தத்தை அருளும் பிரமரந்திரம் போற்றி!

17. சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
20. முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.
- சிவபெருமான் என்னுடைய நெற்றி நடுநிலையில் ஜீவசொரூபமாக நிற்பதால், அவனுடைய அருளாலே அவன் தாளை வணங்கி, என் சூக்கும சரீரம் மகிழுமாறு முன்னை வினைகள் முழுதும் ஒழிந்திட சிவபுராணத்தை நான் உரைக்கின்றேன்.

21. கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
25. பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

- சிவபெருமான் கருணையோடு ஆணையிட்டவாறு நான் இவ்வுலகிற்கு வந்துள்ளேன். (குறிப்பு: இந்த சொற்றொடர் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.) எண்ணுதற்கரிய நிலையில் நெற்றிநடுவில் விளங்கும் ஜோதி சொரூபத் திருவடியை வணங்கி, விண்ணிலும், மண்ணிலும் நிறைந்தும், மேலான ஜோதி சொரூபமாய் விளங்கியும், அளவிட முடியாதவனாயும், எல்லையில்லாதவனாயும், ஒளிர்கின்ற சிறப்புடைய நின்னை, கொடிய வினைகளையுடைய நான் புகழ்வதற்கு அறியேன்.

26. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
31. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

- புல்லாகி, செடிகளாகி, புழுவாகி, மரமாகி, பல்வகையான, மிருகங்களாகி, பறவைகளாகிப், பாம்பாகி, நவரத்தினக்கற்களாகி, மனிதராய், பேயாய், கணங்களாய், அசுரராய், முனிவராய், தேவராய்த் துன்பந்தரும் இவ்வுயிரினங்களுக்குள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்; எம்பெருமானே!

32. மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.

- இன்று, என் நெற்றி நடுவிலுள்ள ஜீவசொரூபமாகிய **நின் திருவடிகளை நான் கண்டு, பிறவித்தளையிலிருந்து விடுதலை பெற்றேன்; இது உண்மை.** (குறிப்பு: ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது)

33. உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
35. ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

- நான் மரணத்திலிருந்து நீங்கும் பொருட்டு, என்னுடைய சூக்கும சரீரத்தோடு இணைந்த ஜீவசொரூபமாய் (அகம் பிரமாஸ்மி) என் நெற்றி நடுவில் விளங்கும், உண்மையானவனே! தூயவனே! ரிஷபவாகனனே! வேதங்கள் எல்லாம் ஐயா என்று உரக்கக் கூவி ஆழ்ந்து தேடியும் கண்டறியாத நுட்பமானவனே!

36. வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
40. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

- சூரியனாய், சந்திரனாய், அனைத்திற்கும் மேலான ஜீவனாய் விளங்கும் தூயவனே! மாயைகள் அனைத்தும் அகன்று போகுமாறு வந்தருளி, மெய்ஞ்ஞான சொரூபமாய் விளங்கும் ஜீவசுடரே! **மரணமில்லாத நிலையை அடைந்த** என்னுடைய இன்பப் பெருமானே! அஞ்ஞானத்தை அகன்றிடச் செய்யும் நல்லறிவே! (குறிப்பு: ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது)

41. ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
45. மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

- ஆதியும், அளவும், அந்தமும் இல்லாதவனே! எல்லா உலகங்களிலும் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய அனைத்து தொழில்களையும் செய்பவனே! மரணம் என்னும் மாய இருளைப் போக்கி, பிரமரந்திரத்தினுள்ளே நின் தொண்டனாய்ப் புகுவிப்பாய். தோற்றத்தில் நுண்மையானவனாய், தலைவனாய் என்னுள்ளே

இருப்போனே! பகைமையுடையார் மனத்தைவிட்டு நீங்கி மறைந்து நிற்போனே!

46. கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
48. பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்

- கறந்த பாலில் சர்க்கரையும் நெய்யும் கலந்ததைப் போன்று, சிறந்த ஞானிகளின் பிரமரந்திரத்தில் அமிர்தம் ஊறிடநின்று, பிறந்த பிறவியை அறுக்கும் எங்கள் பெருமானே!

49. நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
50. மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன்
தன்னை

- அண்டத்திலும், பிண்டத்திலும் கீழ்க்கண்டவாறு ஐந்து நிறங்கள் உடையவனாய் விண்ணோர்கள் போற்றுமாறு பிரமரந்திரத்தினுள் மறைந்திருக்கும் எம் பெருமானே!

விளக்கம்:

1. மண் = சுவாதிஷ்டானம் = பொன்னிறம்
2. நீர் = மணிபூரகம் = வெண்மை
3. தீ = அநாகதம் = சிவப்பு
4. காற்று= விசுத்தி = கருமை
5. ஆகாயம்= ஆக்ஞேயம் = புகை.

ஆதாரம்:

பாரது பொன்மை பசுமை உடையது
நீரது வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதம் கருப்பை உடையது
வானகம் தூமம் மறைந்து நின்றாரே
- திருமந்திரம் 2145

51. மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி

புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி,
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
55. மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

- கொடிய வினைப்பயனுடைய என்னை மறைத்து மூடிய மாயை என்னும் இருளை, புண்ணியம் - பாவம் என்னும் அரிய கயிற்றால் கட்டி, புழுவும் அழுக்கும் மூடிய மலம் கசியும் ஒன்பது வாயில்களை உடைய வீட்டை, வெளியில் தோலால் போர்த்து, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும் மனம் குழம்புமாறு வஞ்சனை செய்ய,

56. விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
60. நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

- குரங்கு மனத்தால், உன்னிடம் கலந்த அன்பு வைத்து கசிந்து உள்ளம் உருகும் தன்மை இல்லாத சிறியேனாகிய என்னை விரும்பி, பூமிக்கு வந்து, நீண்ட திருவடிகளைக் காட்டி, நாயினும் கடையேனாய்க் கிடந்த அடியேனுக்கு,

61. தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
64. பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

- தாயினும் சிறந்த தயவுடைய கடவுளே! மாசற்ற அறஆழி சோதியாய் மலர்ந்த மலர்ச்சுடரே! ஜோதி சொரூபனே! தேன்மிகுந்த அமுதமே! நெற்றி நடுவில் உள்ளவனே! பாசம் என்னும் பற்றை அறுத்துப் பாதுகாக்கும் சிவனே!

65. நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே

நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
70. இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

- அன்போடு அருள்புரிந்து, நெஞ்சில் வஞ்சம் நீங்கிட அகலாது நின்ற பெருங்கருணைக் கடலே! தெவிட்டாத அமுதமே! அளவிடற்கரிய பெரியோனே! தம்மை நினையாதார் உள்ளத்தில் மறைந்து கொள்ளும் ஜோதி சொரூபனே! என் உள்ளத்தை நீர் போன்று உருக்கி, என் ஆருயிர் சொரூபமாய் நிற்பவனே! இன்பமும் துன்பமும் இல்லாதவனே! உடலின் உள்ளே விளங்குபவனே!

71. அன்பருக்கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
74. ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

- ஞானியர்க்கு அன்புடையவனே! எல்லா ஜீவராசிகளிலும் இருப்பினும், அவற்றின் செயல்களுக்குத் தொடர்பில்லாதவனே! சுயம்பிரகாசமானவனே! காணமுடியாதவாறு செறிந்த இருளாய் இருப்போனே! கண்களுக்குத் தோன்றாதவாறு அமர்ந்துள்ள பெருமை உடையவனே! ஆதியானவனாகவும், அந்தமானவனாகவும், நடுவானவனாகவும், இவை ஒன்றும் இல்லாதவனாகவும் விளங்குபவனே! என்னை ஈர்த்து ஆட்கொண்ட என் தந்தையாகிய பெருமானே!

75. கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
78. காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே

- கூர்மையான மெய்ஞ்ஞான தவத்தால் உணர்பவர்களுடைய கருத்தில் நோக்குதற்கரிய பெருமையுடையோனே! நுண்மையினும் நுண்மையானவனே! போக்கும், வரவும், எதனோடும் இணைப்புமில்லாப் புண்ணியனே! என் உடலில் உயிராய்

இருந்து என்னைக் காக்கும் என் காவலனே! காண்பதற்கரிய பேரொளி உடையவனே!

79. ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
83. ஊற்றான உண்ணா ரமுதே உடையானே

- பேரின்ப வெள்ளமே! என் தந்தையே! உயர்வான பிரமரந்திரத்தில் தோன்றும் சுடரொளியே! விளக்கிக் கூறமுடியாத நுண்ணுணர்வே! வஞ்சனையுடைய உலகத்தில் வெவ்வேறு காலங்களில் வரும் ஞானிகளின் அறிவால் உண்மையை அறிவிப்போனே! ஞான சொரூபனே! என்னுடைய பிரமரந்திரத்தில் ஊறுகின்ற தெவிட்டாத அமுதமே! தலைவனே!

84. வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
90. தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

- எனக்குரிய தேவகணத்தின் உடலை விடுத்து, தீய குணமும் வேறுபாடுமுடைய மனித உடலில் இனியும் புகுந்து கிடப்பதைப் பொறுக்க மாட்டேன். ஐயாவோ! சிவபெருமானே! என்று பலமுறை போற்றிப் புகழ்ந்திருந்து பொய்யுடல் மண்ணில் அடங்கிட பரிசுத்தமான சூக்கும உடலைப் பெற்றோர் மீண்டும் இவ்வுலகிற்கு வந்து பாவங்களுடைய பிறவியைச் சாராமல், மெய், வாய், கண், மூக்கு, செவியெனும் வஞ்சனையுடைய புலன்கள் பொருந்திய மனித உடலின் கட்டை அழிக்க வல்லானே! நட்புடைய அஞ்ஞானிகளிடத்து நேரான நிலையில் நெருங்கியிருந்து இயங்கும் தலைவனே!

தில்லைச் சிதம்பரத்தில் நடராஜராய் விளங்குவோனே! மதுரையில் சோமசுந்தரராய் இருப்போனே! (வரி 84, 85 ஆழ்ந்து சிந்திக்கவும்)

91. அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
95. பல்லோரும் ஏத்தப் பணிந்து.

- துன்பம் தரும் பிறப்பை அறுப்போனே! ஓ என்று பெயர் கூறி அழைக்க இயலாதவனைப் புகழ்ந்து, பிரமரந்திரத்திலுள்ள ஜீவசொரூபத்தின் கீழ் நான் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து போற்றுவோர், ஞானிகள் எல்லோரும் போற்றுமாறு பணிவோடு நெற்றி நடு நிலையிலுள்ள ஜீவ சொரூபத்தின் கீழே சென்று முத்தி என்ற நிலையைப் பெறுவர்.

**<u>ஆய்வுக் குறிப்பு:-</u>**

வரி 25, 84-85ன் மூலம் மாணிக்கவாசகர் விண்ணிலிருந்து இறைவனால் மண்ணிற்கு அனுப்பப் பெற்றவர் என்ற உண்மை வெளிப்படக் காணலாம்.

---